# திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் முத்தமிழாயம் வழங்கும்

## இலக்கியப் பதாகை (பறப்பு-16)

***கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவருக்கு***
***மாடல்ல மற்றை யவை.*** *(குறள்-400)*

வள்ளுவனின் குறளிற்கேற்ப கல்விச் செல்வத்தை அள்ளித் தருகின்ற விநாயக மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்தின் கலை மற்றும் அறிவியல் புலத்தின் **திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் முத்தமிழாயம் - தமிழ்த்துறை இலக்கிய பதாகை பறப்பு -16** எனும் சிறப்பு சொற்பொழிவு நிகழ்வு இனிதே நடந்தேறியது.

இந்நிகழ்வில் மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையத்தின் உறுப்பினரும் நாளும் தமிழ் பரப்பும் நல்லாசிரியர், **பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு** ஐயா அவர்கள் **தமிழ் இனி...** என்னும் தலைப்பில் மாணவர்களிடம் பல அரிய சிந்தனைகளை பகிர்ந்து கொண்டார்கள். உலக அளவில் தமிழின் மேன்மைகள் எந்த அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதோடு கி.மு 2ஆம் நூற்றாண்டில் கிரேக்கத்தின் அரண்மனையில் பாண்டிய மன்னனின் தூதுவன் வீற்றிருந்த செய்தியின் மூலம் தமிழர்களின் கடல் சார்ந்த வாணிப முறைகளோடு தொன்மையினைக் குறித்து எடுத்துரைத்தார்கள். மேலும் பேச்சு மற்றும் எழுத்து வழக்கிலும், தொழில்நுட்பத் துறைகளிலும், தமிழ் மொழியினை நாம் சரியாக பயன்படுத்த வேண்டும். அடுத்த தலைமுறைக்கு தமிழில் பெயர் சூட்டுதல், தானியங்கி பணமெடுத்தல் எந்திரத்தில் தமிழ் மொழியை பயன்படுத்தல், பல்பொருள் அங்காடிப் பொருட்களில் தமிழில் அச்சிட வைத்தல் போன்ற அன்றாட சிறுசிறு நிகழ்வுகளில் தமிழ் மொழியினை பயன்பாட்டுக்கு கொண்டு செல்வதற்கு நாம் முன் வரவேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள்.

இத்தகு சிறப்பு வாய்ந்த விழாவிற்கு கலை மற்றும் அறிவியல் புலத்தின் இயக்குநர் **முனைவர் *T.H.*நசீமா** அவர்கள் தலைமை தாங்கினார்கள். விழாவில் நோக்கம் மற்றும் சிறப்பு விருந்தினர் குறித்த அறிமுகத்தை தமிழ்த்துறை தலைவர் **முனைவர் ப.ஜெயபாரதி** அவர்கள் அறிமுக உரையாக தந்தார்கள். சான்றோர் பெருமக்களையும் மாணவச் செல்வங்களையும் மலர்ந்த முகத்தோடு

வரவேற்புரையை **திரு அ.முத்துக்குமார்** அவர்கள் வழங்க, நன்றியுரையை **திரு சு.பழனியப்பா** அவர்கள் தெம்மாங்கு பாட்டோடு நிறைவு செய்தார்கள். விழா சிறப்பாக அமைய ஒவ்வொரு கண்ணியாக தொகுத்து மாலையாக மாற்றினார் நிகழ்ச்சித் தொகுப்பாளர் **முனைவர் ந.சுரேஷ்** அவர்கள். விழா இனிதே நிறைவு பெற்றது.











Deemed To Be University
Declared under section 3 of UGC Act 1956

